**பத்திரிகை வெளியீடு**

**25 ஜனவரி 2024, வியாழன்கிழமை**

நான்கு ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு, 03 பிப்ரவரி 2024 சனிக்கிழமை, பகல் 3.00 மணிமுதல், மும்பையின் ‘ஆகஸ்டு கிராந்தி மைதான்’ என்ற வரலாற்றுத் தளத்தில், **‘மும்பை குயர் ப்ரைட் மார்ச்’** (Mumbai Queer Pride March) என்ற எங்கள் பேரணி புத்துணர்ச்சியுடன் தொடங்கப் போகிறது. இந்த பேரணியில் எங்களுடன் சேர்ந்து குயர் மக்களின் மனித உரிமைக்கான முழக்கத்தில் பங்கேற்க நாங்கள் உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

மும்பையின் பல குயர் நபர்களும் அமைப்புக்களும் கூடி அமைத்த ‘**மும்பை குயர் ப்ரைட்**’ (Mumbai Queer Pride) என்ற எங்கள் குழு இந்த பேரணியை ஏற்பாடு செய்கின்றது. இதற்குத் தேவையான அரசாங்க ஒப்புதல்களுக்காக விண்ணப்பித்துள்ளோம், மற்றும் அந்த ஒப்புதல் குறித்துப் பத்திரிகை மூலம் வெளியிடுவோம்.

‘மும்பை குயர் ப்ரைட் மார்ச்’ என்றால் –

- குயர் சமுதாயத்தின் பன்முகத்தன்மையின் ஒரு கொண்டாட்டம்,
- எங்கள் சமுதாயத்திற்கு எதிரான சவால்களைப் பற்றி சமூகத்திற்கு ஒரு விழிப்புணர்வு,
- திருமணம், குழந்தை தத்தெடுப்பு, ஆகிய உரிமைகள் வேண்டி கோரிக்கை,
- பாகுபாட்டிற்கும் வன்முறைக்கும் எதிராக சட்டங்கள் வேண்டி கோரிக்கை,
- திருநங்கை மன்றங்களை நிறுவி அவர்களுக்காக சமுதாயநலத் திட்டங்களை அமலாக்கக் கோரிக்கை,
- எச்.ஐ.வி. (HIV) யினால் பாதிக்கப்பட்ட நபர்கள் மருத்துவ நலத்திட்டங்கள், கல்வி, தொழில், ஆகிய வசதிகளை எளிதாக பெறவேண்டி கோரிக்கை,
- எச்.ஐ.வி. (HIV) யினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு எதிரான சமூகப் பாகுபாட்டை நீக்க கோரிக்கை,

- சமூகத்திலுள்ள எல்லா விதமான பாகுபாடுகளையும் வன்முறைகளையும் உடனடியாக நீக்க கோரிக்கை.

சமூகத்திலுள்ள பல பிரமுகர்கள், சமூக ஆர்வலர்கள், கலைஞர்கள், நடிகர்கள், இயக்குனர்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், வியாபாரிகள், ஆசிரியர்கள் மற்றும் குயர் பிள்ளைகளின் பெற்றோர்கள் இந்த பேரணியில் சேர்ந்து எங்கள் உரிமைகளுக்கும் கோரிக்கைகளுக்கும் தங்கள் ஆதரவை அளிப்பார்கள்.

இந்த பத்திரிகை வெளியீடு மூலம் நாங்கள் எல்லாப் பத்திரிகையாளர்களையும்  பத்திரிகைத்துறை நபர்களையும் எங்கள் பேரணிக்கு அழைக்கிறோம். இதே போன்ற,  இதைப்பற்றிய செய்தியை கவனமாகக் கையாள வேண்டுகிறோம்.  இந்நிகழ்ச்சியைப்பற்றி மேலும் தகவல் பெறுவதற்காக கீழே குறிப்பிடப்பட்ட எங்கள் பிரதிநிதிகளை தொடர்பு கொள்ளவும்:

- அஞ்சலி சிரோயா – 9664075330
- ஆசீஷ் பண்டியா – 9824215449
- சுதான்சு லதாட் – 8698632699
- சுகேல் அப்பாசி – 9821016939
- ஸௌரப் – 9892973091
- வினி சோப்ரா – 7738498335
- ஹரீஷ் அய்யர் – 9833100340

இப்பேரணிக்கு முன்பு, ஜனவரி மாதம் முழுதும் கலை நிகழ்ச்சிகள், கலந்தாய்வுகள், திரைப்பட காட்சிகள், கதைகள், கவிதைகள், விளையாட்டு, இசை, ஆகிய பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இவற்றைப் பற்றிய தகவல்களை எங்கள் இணையதளத்தில் காணலாம் – mumbaiqueerpride.org

பேரணியில் சேரும் எல்லோரையும் நாங்கள் சட்டத்தைப் பின்பற்ற வேண்டுகிறோம். ஒவ்வொரு நபரின் பங்கேற்புக்கும் பாதுகாப்புக்கும் சட்டத்தைப் பின்பற்றுவது மிகவும் அவசியமானது.

மற்ற சமூக இயக்க செயல்முனைவாளர்களை எங்கள் பேரணியில் வரவேற்கின்றபோது, இந்த பேரணி குயர் மக்களின் உரிமைகளுக்காக மட்டுமே என்று தெளிவாக்குகிறோம். இப்பேரணியில் சேரும் நபர்களின் உடை, செயல், பேச்சு, மற்றும் அவர்கள் கொண்டு போகும் பதாகைகள், ஓவியங்கள், தகவல்கள், எல்லாம் அதற்கு ஏற்ப இருக்கவேண்டும். எந்த நபருக்கும் சமூகத்திற்கும் எதிரான வெறுப்பு, அவமானம், இகழ்ச்சி, பாகுபாடு, வன்முறை, ஆகியவற்றைத் தூண்டும் எண்ணம், பேச்சு அல்லது செயல், எங்கள் பேரணியில் இடம் பெறாது.

எங்கள் நிகழ்ச்சிகளிலும் பேரணியிலும் சேர வரும் உங்களை நாங்கள் உற்சாகத்துடன் வரவேற்போம்.

அன்புடன்,
மும்பை குயர் ப்ரைட்.

**தமிழ் மொழிபெயர்ப்பு உதவி** – டா. அமர்நாத் , விஜயலக்ஷ்மி சுந்தரம்